கழகத்தின் முப்பெரும் விழாவும், பவள விழாவும் செப்.17 அன்று நடைபெற உள்ள சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ மைதானத்தில் நடைபெற்றுவரும் பிரம்மாண்ட பந்தல் அமைக்கும் முன்னேற்பாடு பணிகளை கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் பார்வையிட்டனர். இந்நிகழ்வில் மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன். பகுதி கழகச் செயலாளர்கள் எம். கிருஷ்ணமூர்த்தி, இரா.துரைராஜ் மற்றும் வட்ட கழக செயலாளர் தா.மோகன்குமார் உள்ளிட்டோர் உள்ளனர்.

நாளை 14–ஆம் தேதி காலை தாயகம் திரும்பும்

முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு சென்னை விமான நிலையத்தில் பிரம்மாண்டமான வரவேற்பு!

மாவட்டம் முழுவதிலும் இருந்து கழகத்தினர் திரண்டு வரும்படி மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!

காஞ்சிபுரம், செப்.13–

தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக அமெரிக்க நாட்டிற்குச் சென்று, 16 முன்னணி தொழில் நிறுவனங்களிடமிருந்து 7,016 கோடி ரூபாய் முதலீட்டிற்காக புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டு நாளை 14–ஆம் தேதி காலை 7.00 மணியளவில், வெற்றிகரமாக தாயகம் திரும்பும் முதல்–அமைச்சர் – தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு சென்னை விமான நிலையத்தில், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பிரம்மாண்டமான வரவேற்பு எழுச்சியான முறையில் அளிக்கப்பட உள்ளது என்றும், மாவட்டம் முழுவதிலும் இருந்து கழகத்தினர் அனைவரும் அலைக்கடலேன திரண்டு வந்து கழக கொடியேந்தி உற்சாக வரவேற்பு அளிக்க வேண்டும் என்று மாவட்டச் செயலாளர் –அமைச்சர் தா.மோ. அன்பரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:–

தொழில் துறையைப் பொறுத்த வரையில், இந்திய அளவிலான கவனத்தை மட்டுமல்ல – உலக அளவிலான கவனத்தையும் தமிழ்நாடு பெற்று வருகிறது.,முதல் அமைச்சர் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற இந்த 3

ஆண்டு காலத்தில் எண்ணிலடங்கா தொழில் நிறுவனங்களை தமிழ்நாட்டிற்கு கொண்டு வந்து தமிழ்நாட்டின் தொழில் வளத்தை பெருக்கி வருகிறார்.

தமிழ்நாட்டில் தொழில் தொடங்க உகந்த சூழ்நிலை, தமிழ்நாடு அரசின் தொழில் துறையின் இலகுவான அணுகுமுறை, போக்குவரத்து வசதி, திறன் மிக்க பணியாளர்கள் ஆகிய சிறப்பு அம்சங்களால், பல வெளிநாட்டு தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டை நோக்கி மிகவும் ஆர்வத்துடன் தொழில் தொடங்க முன்வருகின்றனர்.

மேலும் தமிழ்நாடு மாநிலம் அதிக அளவில் தொழில் முதலீடுகளை ஈர்க்கின்ற வகையில் உலகத்தரத்திலான உட்கட்டமைப்பு வசதிகளுடன், தொழில் துறை சார்ந்த தொழில் பூங்காங்களையும் அமைத்து வருகிறது.

2030–ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டை 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார மாநிலமாக மாற்றிட வேண்டும் என்ற உயரிய இலக்கினை, நம்முடைய நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் – நம்முடைய உயிரினும் மேலான அன்புத் தலைவர் – தமிழ்நாடு முதல் அமைச்சர் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நிர்ணயித்து, அந்த உயரிய இலக்கினை அடைவதற்கான அனைத்து முன்னெடுப்புகளையும் மேற்கொண்டு வருகிறார்.

அதன் ஒரு பகுதியாக தமிழ்நாட்டிற்கு அதிக அளவிலான தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக முதல்வர் அவர்கள் அரசு முறை பயணமாக அமெரிக்க நாட்டிற்கு சென்றுள்ளார்.

அமெரிக்க நாட்டில் உள்ள சான்பிரான்சிஸ்கோ மற்றும் சிகாகோவில், உலகின் 16 முன்னணி தொழில் நிறுவனங்களுடன் 7016 கோடி ரூபாய் முதலீட்டிற்காக புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் தமிழ்நாடு முதல்வர் அவர்களின் முன்னிலையில் போடப்பட்டன.

மேலும் அமெரிக்க நாட்டில் உள்ள பல்வேறு முன்னணி தொழில் நிறுவனங்களின் நிர்வாகிகளை நேரில் சந்தித்து, தமிழ்நாட்டில் புதிதாக தொழில் தொடங்க முன்வரும்படி வலியுறுத்தி அழைப்பு விடுத்துள்ளார் நம் முதல்வர்,

இப்படி பல்வேறு அமெரிக்க நாட்டின் முன்னணி தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் புதிய தொழில் நிறுவனங்களை தொடங்கவும், தற்போது உள்ள தொழில் நிறுவனங்களை விஸ்தரிப்பு செய்திடுவதற்கான தொழில் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை வெற்றிகரமாக நிறைவேற்றி விட்டு, நம்முடைய ஒப்பாரும் மிக்காரும் இலா அன்புத் தலைவர், முதல்வர் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நாளை 14 ஆம் தேதி காலை 7.00 மணியளவில் தாயகம் திரும்புகிறார்.

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தை வந்தடையும் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு சென்னை விமான நிலையம் முன்பு ஜி.எஸ்.டி. நெடுஞ்சாலையில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மேள தாளம், பாண்டு வாத்தியம் முழங்க பிரம்மாண்டமான முறையில் வரவேற்பு அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் மாபெரும் தொழில் புரட்சியை செய்து வரும், தொழிற்புரட்சி நாயகர் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு வரவேற்பு அளிப்பது "நமது கடமை, "நமது உரிமை என்ற அந்த உணர்வோடு காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் முழுவதிலும் இருந்து கழகத் தோழர்கள் அனைவரும் தமது கரங்களில் கழகத்தின் இருவண்ணக்கொடியை ஏந்தி, மேளதாளம் – பாண்டு வாத்தியம் முழங்க மிகவும் கோலாகலமான முறையில் எழுச்சியான வரவேற்பு அளித்திடும்படி இருகரம் கூப்பி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிக்கையில் கூறியுள்ளார்.

ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆலந்தூர் மண்டலத்தில் கழிவுநீர் மற்றும் மழைநீர் கால்வாய் பணிக்காக ரூ. 2 கோடியே 3 லட்சம் மதிப்பிலான கழிவு நீர் உந்து வாகனம் உட்பட 5 வாகனங்களை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கொடியசைத்து தொடக்கி வைத்தார். அருகில் மண்டல குழுத் தலைவர் என்.சந்திரன், பகுதிச் செயலாளர் பி.குணாளன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், வட்டச் செயலாளர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

அண்ணா நகர் சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியில்

இரண்டு நியாய விலைக் கடைகள் - அமைச்சர் அர.சக்கரபாணி திறந்து வைத்தார்!

தயாநிதி மாறன் எம்.பி.- நே.சிற்றரசு - எம்.கே. மோகன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சென்னை,செப்.13-

தமிழ்நாட்டில் வேளாண் பெருங்குடி மக்களின் நலனுக்காக முத்தமிழறிஞர் டாக்டர். கலைஞர் அவர்களால் 1972 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நுகர்வோர் நலன் கருதி அமுதம் சிறப்பங்காடிகளையும் நியாய விலைக் கடைகளையும் நடத்தி வருகிறது.

சென்னையில், குறிப்பாக அண்ணா நகரில் பொது மக்களுக்குத் தரமான மளிகைப் பொருட்களை நியாயமான விலையில் வழங்கிட அமுதம் சிறப்பங்காடி நவீனப்படுத்தப்பட்டு விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அமுதம் நியாயவிலைக் கடைகளுக்காக இரண்டு கட்டடங்களும் கட்டப்பட்டுள்ளன.

முதலமைச்சர் அவர்கள் நியாயவிலைக் கடைகள் பொலிவுடனும் வசதியுடனும் அமைந்திட வேண்டும் என்பதற்காக அவரே நியாயவிலைக் கடைகளுக்கான வடிவமைப்பை வழங்கியுள்ளார்கள். அதற்கேற்ப நியாயவிலைக் கடைகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. அதேபோன்று அமுதம் சிறப்பங்காடிகளும் மக்களுக்குச் சிறப்பான சேவை வழங்கிடும் வகையில் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

அதன் அடையாளமாக நேற்று (12.09.2024) அண்ணாநகரில் நவீனமயமாக்கப்பட்ட அமுதம் சிறப்பங்காடியையும் நியாயவிலைக் கடைகளுக்கான இரண்டு புதிய கட்டடங்களையும் மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி அவர்கள் திறந்து வைத்தார்கள். திறப்பு விழாவுக்கு மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் அவர்கள், அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர் எம். கே. மோகன் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சிப் பணிகள் குழுத் தலைவர் நே. சிற்றரசு அவர்களும் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்வில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் ஆ. அண்ணாதுரை, உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை இயக்குநர் த. மோகன், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத் தலைவர் ப. ரங்கநாதன், அண்ணா நகர் மண்டலக் குழு தலைவர், கூபி. ஜெயின், அண்ணா நகர் 102 வது வார்டு கவுன்சிலர் திருமதி. ராணி ரவிச்சந்திரன் மற்றும் துறைசார்ந்த அரசு உயர் அலுவலர்களும் கலந்து கொண்டார்கள்.

ஆர்.ஏ.அஸ்லாம் தலைமை! எஸ்.ராஜசேகர் முன்னிலை!

55 'அ' வட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம்!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு – தயாநிதிமாறன் எம்.பி. சிறப்புரை!

சென்னை, செப். 13-

சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் கிழக்கு பகுதி, 55 'ஆ' வட்ட தி.மு.க. சார்பில் வட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று (31.9.2024 - வெள்ளிக்கிழமை) மாலை 6.00 மணி அளவில் ஷமினா ஹால், எண்.1, பி.வி.ஐயர் தெரு, (மண்ணடி மெட்ரோ அருகில்) சென்னை - 01 எனும் முகவரியில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு வட்ட கழக செயலாளர் ஆர்.ஏ.அஸ்லாம் தலைமை வகிக்கிறார்.

துறைமுகம் கிழக்கு பகுதிச் செயலாளர் எஸ்.ராஜசேகர் முன்னிலை வகிக்கிறார்.

வட்ட அவை தலைவர் வி.சந்திரமோகன் வரவேற்கிறார்.

இக்கூட்டத்தில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் - மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு, தயாநிதி மாறன் எம்.பி. ஆகியோர் சிறப்புரையாற்று கின்றனர். பகுதி பிரதிநிதி வி.பாஸ்கர் நன்றி கூறுகிறார்.

இதில் மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட நிர்வாகிகள், பகுதி நிர்வாகிகள் வட்ட நிர்வாகிகள், அணிகளின் துணை அமைப்பாளர்கள், பாக முகவர்கள், கழக தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு நிகழ்ச்சியை சிறப்பிக்குமாறு வட்டச் செயலாளர் ஆர்.ஏ. அஸ்லாம் கேட்டுக் கொண்டுள்ளார்.

வாணி விலாச சபா
3, டாக்டர் பெசண்ட் ரோடு, கும்பகோணம்.
தோற்றம் : 1914

110 ஆண்டுகள் கடந்த
கும்பகோணம் வாணி விலாச சபா சார்பில்
முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின்
நூற்றாண்டு நிறைவை போற்றும் வகையில்
பாலைவன ரோஜாக்கள்
திரைப்படம் திரையிடப்படுகிறது.

100 ஆண்டுகள் கடந்தும் தமிழர்களின் உள்ளங்களில் என்றும் வாழ்ந்துவரும் கலைஞர் டாக்டர் மு.கருணாநிதி அவர்கள் கதைகள் மற்றும் வசனங்கள் எழுதி இளைஞர்களுக்கு எழுச்சியூட்டி கலை உலகத்திற்கு பெருமை சேர்த்தவரை போற்றும் விதமாக கலைஞர் திரைக்கதை - வசனத்தில் வெளிவந்த படங்களை மாதம் ஒரு படம் வெளியிட்டு வரும் சபாவின் சார்பில் நான்காவது படமாக புரட்சி தமிழன் சத்தியராஜ், இளைய திலகம் பிரபு நடித்த கலைஞரின் பாலைவன ரோஜாக்கள்
14.09.2024 சனிக்கிழமை காலை 11.00 மணி காட்சி மற்றும் மாலை 6.00 மணி காட்சி
இலவசமாக கும்பகோணம் விஜயலெட்சுமி திரையரங்கத்தில்
(சபாவின் கலையரங்கம்) திரையிடப்படுகிறது. அனைவரும் கண்டுகளிக்க வாரீர்! வாரீர்!!

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக சர்வதேச முதலீடுகளை ஈர்க்க அமெரிக்கா சென்று திரும்பும்
தமிழ்நாடு முதல்வர் மாண்புமிகு. மு.க.ஸ்டாலின் அவர்களை வருக! வருக! என
வாழ்த்தி வரவேற்கின்றோம்...

சு.கல்யாணசுந்தரம் M.P செயலாளர்
க.அன்பழகன் MLA., தலைவர்
K.K.S.ராஜா கூடுதல் செயலாளர்
சோழா சி.மகேந்திரன் பொருளாளர்
மற்றும் நிர்வாகிகள் வாணி விலாச சபா, கும்பகோணம்.